ஏற்கெனவே அதிகமாகச் செலவழித்துக் கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் முதலாளிகள் தரும் பங்கின் அளவை அதிகரிக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துப்படி சென்ற கூட்டத்தில் தொழில் நிறுவனத்தார்கள் பங்கை அதிகமாகத் தர வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

* 29 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் நகரில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் நடமாடும் மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ & இ) திருப்பூர் நகரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் நடமாடும் மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) திருப்பூர் நகரத்திற்கு ஐந்து மைல், ஏழு மைல் தொலைவிலிருந்து தொழிலாளர்கள் வருகிறார்கள். காலையில் வேலைக்கு வருபவர்கள் இரவு 7 மணிக்கு விடு திரும்ப வேண்டியிருக்கிறது. ஆகவே அந்தத் தொழிலாளர்களின் நன்மையை உத்தேசித்து, அவர்களுக்காக ஒரு மருத்துவ வேன் அமைக்கும் திட்டம் அரசாங்கத்திற்கு உண்டா? அப்படி அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போது திருப்பூர் மருந்தகம் ஒன்றும், மற்றொரு மருந்தகமும் இருக்கிறது. ஒன்றில் 4,359 தொழிலாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும், மற்றொன்றில் 3,488 தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் பயனடைந்து வருகிறார்கள். தொழிலாளர்கள் நிறைந்த பகுதியிலே இந்த உதவி விஸ்தரிக்கப்பட வேண்டுமென்ற கருத்து நினைவிற்கொண்டு ஆவன செய்யப்படும்.

மு.ப. 9–30

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிடல் பல்லடம் இலட்சுமி மில்லில் இருக்கிறது. ஆனால் இலட்சுமி நாராயணு மில்லில் நிறைய தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். அந்த ஹாஸ்பிடலில் இருக்கும் மில்லுக்குச் செல்ல 6 மைல் ஆகிறது. வேலை விட்டு 4 மணிக்குமேல் மாலையில் போக பஸ் வசதியும் இல்லை. எனவே அந்தப் பகுதியில் உள்ள மில்லுக்கு மொபைல் டிஸ்பென்சரியை, நடமாடும் ஆஸ்பத்திரியை அனுப்பி சிகிச்சை அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1971 ஜூன் 23]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு மதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, கோவை. திருப்பூர் போன்ற நகரங்களில் மட்டும் அல்ல, எங்கே தொழிலாளர்கள் அதிகம் வசிக்கிறார்களோ அங்கே போக்குவரத்து வசதிக்கு அதிக செலவுகளும், நேரமும் வீணாவதாக, அடிக்கடி குறைகள் சொல்லப்படுகின்றன. அதை நிவர்த்தி செய்ய உடனடியாக அப்படித் தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளுக்கு மொபைல் மெடிகல் யூனிட் ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்பொழுதே ஏறத்தாழ 100-க்கு 75 சதவிகிதம் தொழிலாளர்களுக்கு இந்த மருத்துவ உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் அளிக்கப்பட வேண்டிய எண்ணிக்கை, 25 சதவிகிதம்தான் இருக்கும். மேலும் தொடர்ந்து பல மருத்துவ மனைகளைத் துவக்கி வருகிறது. அவர்கள் சொன்னது போல், எவ்வளவு விரைவில் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்குச் செய்ய அரசுக்கு அக்கறை இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, சோமனூரில் ஈ.எஸ்.ஐ. மருந்தகம் துவங்குவது என்று தீர்மானித்து, கட்டிடமும் வாடகைக்கு எடுத்து, பல மாதங்களாக வாடகை மட்டும் கொடுக்கப்பட்டு இன்னும் மருந்தகம் தொடங்கப்படாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? உடனடியாகத் தொடங்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தச் செய்தி எனக்கு இப்போதுதான் தெரிய வருகிறது. எனவே, அதுபற்றி விசாரித்து தக்க முறை மேற் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நாகர்கோயிலில் இருக்கும் ஈ. எஸ். ஐ. ஹாஸ்பிடலில் ஒரு ஆண் டாக்டர் மாத்திரம் இருக்கிறார். அங்கு ஒரு பெண் டாக்டரை நியமிக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : இதற்குத் தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரத்தை அறிவிக்கலாம்.

திரு. மா. வே. நாராயணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே, நகரத்தை யொட்டியுள்ள தொழில் பகுதிகளிலே ஈ. எஸ். ஐ. திட்டம் ஏற்கனவே அமலில் இருந்து வருகிறது. ஆனால் அது செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள செங்குன்றம் வரையில்தான் இருக்கிறது. அதற்கு அப்பாலுள்ள சோழவரம் வரை சில பல தொழிற்சாலைகள் இருப்பதால் அங்குள்ள தொழிலாளர்களுக்கும் ஈ. எஸ். ஐ. திட்டத்தை விஸ்தரிக்கும் முறையை நம்முடைய அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மீஞ்சூரில் இப்பொழுது ஈ.எஸ்.ஐ. மருந்தகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ரெட்ஹில்ஸிலும் அமைப்பதற்கு அரசு யோசித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 26, 27 ஆகிய இரண்டு வினாக்களும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வானொலி நிகழ்ச்சிகள்.

*26 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள வானொலி நிலையங்களில், இஸ்லாமிய, கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்கு இன்னும் அதிக சந்தர்ப்பமும், நேரமும் அளிக்க அரசு ஆவன செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

*27 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய தனி நேரம் ஒதுக்க மாநில அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, மதப் பிரச்சாரத்தால் ஜாதிகள் வளர்கின்றன என்பது உண்மையா? அம்மாதிரி மதப் பிரச்சாரத்தைத் தடை செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது வானொலி சம்பந்தமான பிரச்னை. ஆகவே, சர்க்காரும் மதப்பிரச்சாரமும் என்கின்ற இணைப்பில் இது வராது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சமயப் பிரச்சாரங்கள் செய்ய அனுமதிக்கப்படும் வானொலியில் எல்லாக் கருத்துக்களுக்கும் சம வாய்ப்பளிக்கின்ற அடிப்படையில் வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை அனுமதிக்க வேண்டி மாநில அரசு மத்திய அரசிடம் கூறுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. கிட்டப்பா அவர்களுடைய முதல் கேள்வி, 'வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய தனி நேரம் ஒதுக்க மாநில அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதா?' என்பதாகும். இப்பொழுது அவர் கேட்டிருக்கின்ற துணைக் கேள்வியும் அதைச் சார்ந்ததாகவே இருக்கும் என்ற கருத்தில் நான் பதில் அளிக்கிறேன். வானொலியிலே பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது என்பது, மற்ற மதப் பிரசாரங்களுக்கு எதிரிடையான பிரச்சாரமாக இருக்கக் கூடாது. அப்படி